# தமிழ் அர்ச்சனை மலர்



ஆக்கம்
ம.ஜெகநாதன் (ஜெக்கி)

# தமிழ் அர்ச்சனை மலர்



திருமதி. தர்மராணி ஜெகநாதன்
வெள்ளவத்தை

# நூல் விபரம்

நூலின் பெயர்: தமிழ் அர்ச்சனை மலர்

தொகுப்பு:
நூல் வடிவமைப்பு: ம.ஜெகநாதன்
அச்சுப் பதிவு:

கணனி தட்டச்சு:
ஒப்பு நோக்கல்: திருமதி. தர்மராணி ஜெகநாதன்

பதிப்பு: ஒகஸ்ட் 12019

பக்கங்கள்: 02+34

# உள்ளடக்கம்

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1. முன்னுரை … … … | 01 |
| 2. பிள்ளையார் அர்ச்சனை … | 03 |
| 3. சிவன் அர்ச்சனை … … | 07 |
| 4. அம்மன் அர்ச்சனை … | 11 |
| 5. திருமால் அர்ச்சனை … | 15 |
| 6. முருகன் அர்ச்சனை … | 19 |
| 7. ஆஞ்சநேயர் அர்ச்சனை .. | 23 |
| 8. ஐயப்பன் அர்ச்சனை … | 27 |
| 9. வைரவர் அர்ச்சனை … | 31 |

# முன்னுரை

அர்ச்சனை என்றால் அர்ச்சிப்பது எனப் பொருள். இறைவனை வழி படும் முறைகளில் இதுவும் ஒன்று. அர்ச்சனை என்பது வேறு. பூசை என்பது வேறு. கோயில்களில் நாள் முழுவதும் பலவித பூசைகள் செய்யப்படுகின்றன. அவற்றிற்கு “கால பூசைகள்” என்று பெயர். அர்ச்சனை என்பது பக்தர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, குறிப்பிட்டவர்களின் நல்வாழ்விற்காக செய்யப்படும் வழிபாடு. இறைவ னின் புகழை மனதார, வாயாரப் பாடுவதாகும். இப்படிப் பாடும்போது எமது குறைகளை அவனிடத்தில் முறையிடுவதுதான் அர்ச்சனை செய்வதன் தாத்பரியம். அர்ச்சனையின்போது துதிகளை ஒவ்வொரு அடிகளைச் சொல்லி மலரைத் திருவடிகளில் இடுவது. இது பூசை செய்வதைக் காட்டிலும் சக்தி பெற்றது.

அர்ச்சனை செய்வது இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் இருக்கலாம் அல்லது எமது வாழ்வின் உயர்வுக்காக அவரிடம் ஏதாவது விண்ணப்பம் வைக்கும் வகையிலும் இருக்கலாம். எமக்கு தந்த நன்மைக்காக நன்றி செலுத்த வேண்டும் என்றால் இறைவன் பெயரில் அர்ச்சனை செய்யலாம். ஏதாவது விண்ணப்பம் வைக்க வேண்டும் என்றால் எமது பெயரில் செய்யலாம்.

இறைவனுக்கு ஆறுவகையான உபசாரங்கள் செய்யப்படுகின்றன. இவற்றுள் அர்ச்சனையே முக்கியத்துவம் பெறுகிறது. பூக்களாலும், குங்குமத்தாலும் இறைவனுக்கு உகந்த நாமாக்களால் அர்ச்சனை செய்து அவரின் கருணைக்கு பாத்திரமாவது நாம் வழிபடும் முறை யாகும். கேட்டதை கொடுக்கும் ஆற்றல் அர்ச்சனைக்கு உண்டு.

அர்ச்சனை வழிபாட்டின் மூலம் நாம் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். எமது பாவத்தையும், பிரச்னையும் தீர்க்கக் கூடிய சக்தி இறைவனுக்கு மட்டுமே உண்டு.

அர்ச்சனைக்குரிய தொடர்களில் வரிகளையோ, அடிகளையோ எமக்கு வேண்டியவாறு அமைத்துக்கொள்ளலாம். போற்றி என்று அமையா மல் தாயே, நீயே, போலும் என்று முடியும் தாண்டகங்களும் உள்ளன.

அவற்றையும் அர்ச்சனைக்கு பயன்படுத்தலாம். தவிர திருவாசகத்திலும் வாழ்க, வெல்க என்னும் தொடர்கள் உள்ளன. இவற்றையும் அர்ச்சனைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை எல்லாம் சேர்த்து இலட்சம் போற்றித் தொடர்களை அமைத்துத் தமிழில் "இலட்ச அர்ச்சனை" செய்யலாம்.

இவ்வாறே ஒவ்வொரு தெய்வத்தின் மீதும் பாடப்பட்ட பாடல்களை, அந்தந்த தெய்வத்தின் மீது பாடப்பட்ட தொடர்களுடன் "போற்றி " யை சேர்த்து அர்ச்சனை மந்திரமாக கூறி வழிபடலாம்.

தமிழ் அர்ச்சனையே இறைவனுக்கு பிடித்தம் என்பதை சுந்தரரின் வாழ்க்கை வரலாற்றில் இறைவன் உணர்த்துகிறார். இவ்வுண்மையை பெரியபுராணத்தில் சேக்கிழார்,

"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
**அற்சனை பாட்டே** யாகும் ஆதலான் மண்மேல் நம்மைச்
**சொற்றமிழ் பாடு** கென்றார் தூமறை பாடும் வாயார்."

என்று அறிவித்துள்ளார். அதாவது,

'நீ மறுத்து நம்மிடம் வலிந்து பேசியதால் வன்றொண்டன் என்று பெயர்பெற்றாய். நமக்கு அன்பினாலே சிறந்த அர்ச்சனையாவது நம்மைத் துதிக்கும் பாடல்களேயாம். ஆதலால் இவ்வுலகத்திலே நம்மைத் துதித்துத் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடுவாயாக!"

என்பதாகும்.

எனவே தமிழ்மொழி வேதங்களை ஓதவும், தமிழில் அர்ச்சனை செய்யவும் ஒவ்வொருவரும் முயற்சி எடுத்தல் வேண்டும்.

# பிள்ளையார் அர்ச்சனை

தெய்வங்களுக்கு எல்லாம் தெய்வமாக வணங்கப்படுபவர் விநாயகர். விநாயகருக்கு தீபம் ஏற்றி, இந்த 108 துதிகளை மனமொன்றி படிக்க எண்ணிய காரியங்கள் நிறைவேறும். தொடங்கவிருக்கும் எத்தகைய காரியங்களும் தடைகள், தாமதங்கள் இன்றி சிறப்பாக முடியும்.

1. ஓம் எனும் பொருளாய் உள்ளாய் போற்றி
2. பூமெனும் பொருள் தொறும் பொலிவாய் போற்றி
3. அகரம் முதலென ஆனாய் போற்றி
4. அகர உகர ஆதி போற்றி
5. மகரமாய் நின்ற வானவ போற்றி
6. பகர்முன்னவனாம் பரனே போற்றி
7. மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
8. கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
9. நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி
10. கார் குளிராகக் கனிந்தாய் போற்றி
11. பகலவன் நிலவாய்ப் பரந்தாய் போற்றி
12. நிகர்மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி
13. மழைபொழி இமயவல்லி சேய் போற்றி
14. தழைசெவி எண்தோள் தலைவ போற்றி
15. திங்கட் சடையோன் செல்வ போற்றி
16. எங்கட்கு அருளும் இறைவா போற்றி
17. ஆறுமுகச் செவ்வேட்கு அண்ணா போற்றி
18. சிறுகண் களிற்றுத் திருமுக போற்றி
19. செம்பொன் மேனிச் செம்மால் போற்றி
20. உம்பர் போற்றும் உம்பர் போற்றி
21. பண்ணியம் ஏந்துகைப் பண்ணவ போற்றி
22. எண்ணிய எண்ணியாங் கிசைப்பாய் போற்றி
23. அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
24. முப்புரி நூல் மார்பு அப்பா போற்றி

25. எள்ளுருண்டை பொரி ஏற்போய் போற்றி
26. தெள்ளுறு தெவிட்டாத் தேனே போற்றி
27. மூவர் மொழியிடம் மொழிந்தாய் போற்றி
28. தேவர்க்கு அரிய தேவா போற்றி
29. மாலுக்கு அருளிய மதகரி போற்றி
30. பாலனெக் கடல்நீர் பருகினாய் போற்றி
31. பாரதம் எழுதிய பரூஉக்கர போற்றி
32. மாரதம் அச்சொடி மதவலி போற்றி
33. மாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
34. ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி
35. கரும்பாயிரங்கொள் கள்வா போற்றி
36. அரும்பொருளே எம் ஐயா போற்றி
37. திணைபால் கடந்த தேவே போற்றி
38. புனையாய் இடர்க்கடல் போக்குவோய் போற்றி
39. பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி
40. ஏழைக்கிரங்கும் எம்மிறை போற்றி
41. அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
42. அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
43. திருநீற்றொளிசேர் செம்மால் போற்றி
44. இருவேறுருவ ஈசா போற்றி
45. உள்ளத்திருளை ஒழிப்பாய் போற்றி
46. கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
47. நம்பியாண்டார்க்கருள் நல்லாய் போற்றி
48. எம்பிரானாக இசைந்தாய் போற்றி
49. உருகுவோருள்ளத் தொளியே போற்றி
50. பெருமருள் சுரக்கும் பெருமான் போற்றி
51. தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
52. உம்பர்கட்கரசே ஒருவ போற்றி
53. பிள்ளையார்ப் பெயர்கொண்டுள்ளாய் போற்றி
54. வள்ளலாய் நலங்கள் வழங்குவாய் போற்றி
55. மூவா சாவா முத்தா போற்றி
56. ஆவா எங்களுக்கு அருள்வாய் போற்றி
57. தமிழ்ச்சுவைச்சார் திருச்செவியாய் போற்றி
58. அமிழ்தாய் எம் அகத்தானாய் போற்றி
59. மழவிளங்களிறே மணியே போற்றி

60. குழவியாய்ச் சிவன் மடி குலவுவோய் போற்றி
61. பெருச்சாளியூரும் பிரானே போற்றி
62. நரிச்செயலார் பால் நண்ணாய் போற்றி
63. செந்தாமரைத்தாள் தேவா போற்றி
64. நந்தா மணியே நாயக போற்றி
65. இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி
66. கரிமுகத்தெந்தாய் காப்போய் போற்றி
67. ஆங்காரம்முளை அறுப்பாய் போற்றி
68. பாங்கார் இன்பப் பராபர போற்றி
69. கற்றவர் விழுங்கும் கனியே போற்றி
70. மற்றவர் காணாமலையே போற்றி
71. சொல்லொடு பொருளின் தொடர்பே போற்றி
72. கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
73. தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
74. முந்திய பொருட்கும் முந்தியோய் போற்றி
75. ஐந்துகையுடைய ஐய போற்றி
76. ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
77. அருளாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
78. தருவாய் மணமலர்த் தாராய் போற்றி
79. கயமுக அசுரனைக் காய்ந்தாய் போற்றி
80. மயலறும் இன்ப வாழ்வே போற்றி
81. ஆனையாய்ப் புழுவாய் ஆனாய் போற்றி
82. பானை வயிற்றுப் பரமே போற்றி
83. கடம்பொழி யானைக் கன்றே போற்றி
84. மடம் ஒழி அறிவின்வளனே போற்றி
85. பாலொடு தேனும் பருகுவோய் போற்றி
86. மேலொடு கீழாய் மிளிர்வாய் போற்றி
87. எய்ப்பில் வைப்பாய் இருந்தோய் போற்றி
88. மெய்ப்பொருள் வேழமுகத்தாய் போற்றி
89. நால்லார்க் கெட்டும் நாதா போற்றி
90. பொல்லா மணியே புராதன போற்றி
91. அறிவின் வரம்பை அகன்றாய் போற்றி
92. குறிகுணங் கடந்த குன்றே போற்றி
93. எட்டு வான் குணத்தெந்தாய் போற்றி
94. கட்டறு களிற்று முகத்தோய் போற்றி

95. மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி
96. அலர் கதிர் ஒளியின் அமர்வோய் போற்றி
97. ஓங்கார முகத்தொருத்தல் போற்றி
98. ஏங்கா துயிர்க்கருள் இயற்கை போற்றி
99. எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி
100. பண்ணும் பயனுமாய்ப் பரந்தாய் போற்றி
101. அருவே உருவே அருவுருவே போற்றி
102. பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
103. புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
104. அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி
105. செல்வம் அருள்க தேவா போற்றி
106. நல்லன எமக்கருள் நாயக போற்றி
107. ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
108. காக்க எங்களை உன் கழலிணை போற்றி! போற்றியே!



# சிவன் அர்ச்சனை

சிவனின் திருநாமங்களையும், பெருமைகளையும் போற்றி வாழ்த்தி மலர்தூவி வழிபட வேண்டும். பாடிப்பாடிப் பரவவும், பணிந்து உவந்து போற்றவும். இதனால் பரமனருள் சித்திப்பது உறுதி. ஒவ்வொரு போற்றி முடிந்ததும் வில்வத் தழையோ மலரோ இறைவன் பாதங்க ளில் இட்டு, அருச்சனை செய்வது போல் மனப்பூர்வமாகப் பாவிக்கவும்.

1. ஓம் அகரமே அறிவே போற்றி
2. ஓம் அகஞ்சுடர் விளக்கே போற்றி
3. ஓம் அகந்தை நோய் அழிப்பாய் போற்றி
4. ஓம் அகத்தனே போற்றி
5. ஓம் அடியர்கள் துணையே போற்றி
6. ஓம் அணுவினுள் அணுவே போற்றி
7. ஓம் அண்டங்கள் கடந்தாய் போற்றி
8. ஓம் அம்மையே அப்பா போற்றி
9. ஓம் அருமறை முடிவே போற்றி
10. ஓம் அருந்தவர் நினைவே போற்றி
11. ஓம் அரும்பிறை அணிந்தாய் போற்றி
12. ஓம் அரஹரா போற்றி
13. ஓம் அலைகடல் விரிவே போற்றி
14. ஓம் அவிரொளி சடையாய் போற்றி
15. ஓம் அழகனாம் அமுதே போற்றி
16. ஓம் அறிந்திடு மொழியே போற்றி
17. ஓம் அளப்பிலா அருளே போற்றி
18. ஓம் அன்பெனும் மலையே போற்றி
19. ஓம் ஆடரவு அணியாய் போற்றி
20. ஓம் ஆடிடும் கூத்தா போற்றி
21. ஓம் ஆதாரப் பொருளே போற்றி
22. ஓம் ஆதியே அருளே போற்றி
23. ஓம் ஆலால கண்டா போற்றி

24. ஓம் ஆலமர் குருவே போற்றி
25. ஓம் ஆலவாய் அப்பா போற்றி
26. ஓம் ஆரூரின் தியாகா போற்றி
27. ஓம் ஆற்றலே போற்றி
28. ஓம் இடபவா கனத்தாய் போற்றி
29. ஓம் இதயத்தே கனிவாய் போற்றி
30. ஓம் இமயவள் பங்கா போற்றி
31. ஓம் இமையவர் உளத்தாய் போற்றி
32. ஓம் இரக்கமே வடிவாய் போற்றி
33. ஓம் இருட்கறை மிடற்றாய் போற்றி
34. ஓம் இருவினை தவிர்ப்பாய் போற்றி
35. ஓம் இன்னல்கள் களைவாய் போற்றி
36. ஓம் இனிமையே நிறைப்பாய் போற்றி
37. ஓம் இனியவர் மனத்தாய் போற்றி
38. ஓம் இனிய செந்தமிழே போற்றி
39. ஓம் இலக்கியச் செல்வா போற்றி
40. ஓம் இறைவனே போற்றி
41. ஓம் ஈசனே போற்றி
42. ஓம் ஈசானத் திறையே போற்றி
43. ஓம் ஈடிலா பிரானே போற்றி
44. ஓம் ஈந்தருள் தேவே போற்றி
45. ஓம் ஈமத்தே குமிப்பாய் போற்றி
46. ஓம் உடுக்கையின் ஒலியே போற்றி
47. ஓம் உடைகரித் தோலாய் போற்றி
48. ஓம் உடையனே போற்றி
49. ஓம் உணவொடு நீரே போற்றி
50. ஓம் உரைகடந் தொளிர்வாய் போற்றி
51. ஓம் உருவொடும் அருவே போற்றி
52. ஓம் உமையொரு பாகா போற்றி
53. ஓம் உலகின் முதலே போற்றி
54. ஓம் உள்ளொளிர் சுடரே போற்றி
55. ஓம் ஊக்கமே உணர்வே போற்றி

56. ஓம் ஊங்கார ஒலியே போற்றி
57. ஓம் ஊரெல்லாம் உவப்பாய் போற்றி
58. ஓம் ஊழினை விதிப்பாய் போற்றி
59. ஓம் எண்குண வடிவே போற்றி
60. ஓம் எம்பிரான் போற்றி
61. ஓம் எரிதவழ் விழியாய் போற்றி
62. ஓம் எருதேறும் ஈசா போற்றி
63. ஓம் எல்லையில் எழிலே போற்றி
64. ஓம் ஏக நாயகனே போற்றி
65. ஓம் ஏகம்பா இறைவா போற்றி
66. ஓம் ஏக்கமே களைவாய் போற்றி
67. ஓம் ஏந்துகூர் மழுவாய் போற்றி
68. ஓம் ஏந்தலே போற்றி
69. ஓம் ஏத்துவார் ஏத்தே போற்றி
70. ஓம் ஏதிலார் புகழே போற்றி
71. ஓம் ஏர்முனைச் செல்வா போற்றி
72. ஓம் ஏற்றமே தருவாய் போற்றி
73. ஓம் ஐம்பூத வடிவே போற்றி
74. ஓம் ஐம்புலன் அவிப்பாய் போற்றி
75. ஓம் ஐயங்கள் களைவாய் போற்றி
76. ஓம் ஐயனே அரனே போற்றி
77. ஓம் ஒண்குழைக் காதா போற்றி
78. ஓம் ஒப்பிலா மணியே போற்றி
79. ஓம் ஒளியெறி நுதலாய் போற்றி
80. ஓம் ஒள்ளிழை பாகா போற்றி
81. ஓம் ஒப்பிலாய் போற்றி
82. ஓம் கண்கள் மூன்றுடையாய் போற்றி
83. ஓம் கண்ணப்பர் முதலே போற்றி
84. ஓம் கருணைமா கடலே போற்றி
85. ஓம் கறைதிகழ் கண்டா போற்றி
86. ஓம் காமனை எரித்தாய் போற்றி
87. ஓம் காலனை கடிந்தாய் போற்றி

88. ஓம் கடவுளே போற்றி
89. ஓம் சிவமெனும் பொருளே போற்றி
90. ஓம் செவ்வொளி வடிவே போற்றி
91. ஓம் தவநிலை முடிவே போற்றி
92. ஓம் தண்பதம் தருவாய் போற்றி
93. ஓம் பவலமெலாம் தவிர்ப்பாய் போற்றி
94. ஓம் பரமெனும் பொருளே போற்றி
95. ஓம் புலியூரான் உளத்தாய் போற்றி
96. ஓம் புரந்து அருள்வாய் போற்றி
97. ஓம் புண்ணியா போற்றி
98. ஓம் புனர் ஜன்மம் தந்தோனே போற்றி
99. ஓம் புகழ் தருவோனே போற்றி
100. ஓம் பூமி நாயகனே இறைவா போற்றி
101. ஓம் மலையான் மருமானே போற்றி
102. ஓம் மலைவாழ் நாயகனே போற்றி
103. ஓம் மாதா வானவனே இறைவா போற்றி
104. ஓம் மகத்தா னாவனே போற்றி
105. ஓம் வண்ண நீல வடிவானவனே போற்றி
106. ஓம் வடிவம் பல கொண்டவனே போற்றி
107. ஓம் வாழ வழி காட்டுபவனே போற்றி
108. ஓம் வாழும் இறைவா போற்றி! போற்றி!



# அம்மன் அர்ச்சனை

என்றென்றும் நம்மை காத்து அருளும் அம்மனின் அருளைப் பெற இந்த போற்றியை தினமும் சொல்லி வரவேண்டும. இதனால் சகல சௌபாக்கியங்களும் பெற்று நலமுடன் வாழலாம். அம்மையின் பரிபூரண அருளினால், வீட்டில் மங்களம் பெருகும்.

1. ஓம் ஆதிப்பரம் பொருளே போற்றி
2. ஓம் ஆதிபராசக்தியே போற்றி
3. ஓம் ஆனந்த வல்லியே போற்றி
4. ஓம் ஆன்ம சொரூபினியே போற்றி
5. ஓம் அருளின் உருவே போற்றி
6. ஓம் அம்பிகை தாயே போற்றி
7. ஓம் அன்பின் வடிவே போற்றி
8. ஓம் அனாத ரட்சகியே போற்றி
9. ஓம் அருட்பெருந்ஜோதியே போற்றி
10. ஓம் அன்னப்பூரணியே போற்றி
11. ஓம் அமுதச் சுவையே போற்றி
12. ஓம் அருவுரு ஆனவளே போற்றி
13. ஓம் ஆதி சக்தியே போற்றி
14. ஓம் அங்காள அம்மையே போற்றி
15. ஓம் ஆங்காரி அங்காளியே போற்றி
16. ஓம் ஆறுமுகன் அன்னையே போற்றி
17. ஓம் ஆதியின் முதலே போற்றி
18. ஓம் ஆக்குத் சக்தியே போற்றி
19. ஓம் இன்னல் களைவாளே போற்றி
20. ஓம் இடர்நீக்குவாளே போற்றி
21. ஓம் இமயத்து அரசியே போற்றி
22. ஓம் இச்சா சக்தியே போற்றி
23. ஓம் இணையிலா தெய்வமே போற்றி

24. ஓம் இரவு பகலாகி இருப்பவளே போற்றி
25. ஓம் இயக்க முதல்வியே போற்றி
26. ஓம் இறைவனின் இறைவியே போற்றி
27. ஓம் இகம்பர சுகமே போற்றி
28. ஓம் ஈசனின் தாயே போற்றி
29. ஓம் ஈஸ்வரி தாயே போற்றி
30. ஓம் ஈகைப் பயனே போற்றி
31. ஓம் ஈடில்லா தெய்வமே போற்றி
32. ஓம் ஈசனின் பாதியே போற்றி
33. ஓம் ஈஸ்வரி அங்காளியே போற்றி
34. ஓம் ஈசனின் இயக்கமே போற்றி
35. ஓம் ஈஸ்வரி ஆனவளே போற்றி
36. ஓம் ஈகை குணவதியே போற்றி
37. ஓம் உண்மை பொருளே போற்றி
38. ஓம் உலகை ஈன்றாய் போற்றி
39. ஓம் உலகில் நிறைந்தாய் போற்றி
40. ஓம் உருவம் ஆனாய் போற்றி
41. ஓம் உமை அம்மையே போற்றி
42. ஓம் உயிரே வாழ்வே போற்றி
43. ஓம் உயிராய் இருப்பாய் போற்றி
44. ஓம் உடலாய் ஆனாய் போற்றி
45. ஓம் உமாமகேஸ்வரியே போற்றி
46. ஓம் ஊனுயிர் ஆனாய் போற்றி
47. ஓம் ஊக்கம் அருள்வாய் போற்றி
48. ஓம் ஊழ்வினை அறுப்பாய் போற்றி
49. ஓம் ஊரைக்காப்பாய் போற்றி
50. ஓம் ஊழலை ஒழிப்பாய் போற்றி
51. ஓம் ஊக்கமாய் நிறைவாய் போற்றி
52. ஓம் ஊடல் நாயகியே போற்றி
53. ஓம் ஊழ்வினை களைவாய் போற்றி
54. ஓம் ஊற்றும் கருணை மழையே போற்றி
55. ஓம் எங்கும் நிறைந்தாய் போற்றி
56. ஓம் எங்களை காப்பாய் போற்றி

57. ஓம் எண்குண வல்லி போற்றி
58. ஓம் எழில்மிகு தேவி போற்றி
59. ஓம் ஏழிசைப் பயனே போற்றி
60. ஓம் ஏகம்பன் துணைவி போற்றி
61. ஓம் ஏகாந்த ரூபிணியே போற்றி
62. ஓம் ஏழையை காப்பாய் போற்றி
63. ஓம் ஐங்கரன் தாயே போற்றி
64. ஓம் ஐயனின் பாகமே போற்றி
65. ஓம் ஐயம் தெளிந்தாய் போற்றி
66. ஓம் ஐம்பொறி செயலே போற்றி
67. ஓம் ஐம்புலன் சக்தியே போற்றி
68. ஓம் ஒருமாரி உருமாரி போற்றி
69. ஓம் ஒன்பான் சுவையே போற்றி
70. ஓம் ஒலி ஒளி ஆனாய் போற்றி
71. ஓம் ஒப்பில்லா சக்தி போற்றி
72. ஓம் ஒழுக்கம் அருள்வாய் போற்றி
73. ஓம் ஓங்காரி ஆனாய் போற்றி
74. ஓம் ஓங்காரி அங்காளி போற்றி
75. ஓம் ஓம்சக்தி தாயே போற்றி
76. ஓம் ஒருவாய் நின்றாய் போற்றி
77. ஓம் ஓங்கார சக்தியே போற்றி
78. ஓம் கல்விக் கடலே போற்றி
79. ஓம் கற்பூர வல்லி போற்றி
80. ஓம் கந்தன் தாயே போற்றி
81. ஓம் கனகாம்பிகையே போற்றி
82. ஓம் கார்மேகன் தங்கையே போற்றி
83. ஓம் காளி சூலியே போற்றி
84. ஓம் காக்கும் அங்காளியே போற்றி
85. ஓம் சங்கரி சாம்பவீ போற்றி
86. ஓம் சக்தியாய் நின்றாய் போற்றி
87. ஓம் சாந்தவதியே போற்றி
88. ஓம் சிவகாம சுந்தரி போற்றி

89. ஓம் சினம் தணிப்பாய் போற்றி
90. ஓம் சிங்க வாகனியே போற்றி
91. ஓம் சீற்றம் கொண்டாய் போற்றி
92. ஓம் சுந்தரவல்லி போற்றி
93. ஓம் சூரசம்மாரி போற்றி
94. ஓம் தாண்டவ ஈஸ்வரி போற்றி
95. ஓம் தாட்சாயணிதேவி போற்றி
96. ஓம் திரிபுரசுந்தரி போற்றி
97. ஓம் தீபச் சுடரொளியே போற்றி
98. ஓம் நடன நாயகி போற்றி
99. ஓம் நான்மறைப் பொருளே போற்றி
100. ஓம் நீலாம்பிகையே போற்றி
101. ஓம் நீதிக்கு அரசி போற்றி
102. ஓம் பஞ்சாட்சரியே போற்றி
103. ஓம் பம்பை நாயகியே போற்றி
104. ஓம் பார்வதா தேவி போற்றி
105. ஓம் பாம்பின் உருவே போற்றி
106. ஓம் பார்புகழும் தேவியே போற்றி
107. ஓம் பிணிக்கு மருந்தே போற்றி
108. ஓம் பிறவி அறுப்பாய் போற்றி! போற்றி!!



# திருமால் அர்ச்சனை

வீட்டில் திருவிளக்கேற்றியதும் இதைப்பாடி உலக மக்களை எல்லாம் காத்து இரட்சிக்கும் கடவுளான திருமாலின் பேரருளைப் பெற்று செல்வச் செழிப்புடன் வாழலாம்.

1. ஓம் முகுந்தா போற்றி
2. ஓம் வைகுந்தா போற்றி
3. ஓம் கோவிந்தா போற்றி
4. ஓம் பச்சை வண்ணா போற்றி
5. ஓம் ஹரி ஹரி போற்றி
6. ஓம் ஶ்ரீஹரி போற்றி
7. ஓம் நர ஹரி போற்றி
8. ஓம் முர ஹரி போற்றி
9. ஓம் கிருஷ்ணா ஹரி போற்றி
10. ஓம் அம்புஜாஷா போற்றி
11. ஓம் அச்சுதா போற்றி
12. ஓம் உச்சிதா போற்றி
13. ஓம் பஞ்சாயுதா போற்றி
14. ஓம் பாண்டவர் தூதா போற்றி
15. ஓம் லட்சுமி சமேதா போற்றி
16. ஓம் லீலா விநோதா போற்றி
17. ஓம் கமல பாதா போற்றி
18. ஓம் ஆதி மத்தியாந்த ரகிதா போற்றி
19. ஓம் அநாத ரக்ஷகா போற்றி
20. ஓம் அகிலாண்டகோடி போற்றி
21. ஓம் பரமானந்தா போற்றி
22. ஓம் கார்வண்ணா போற்றி
23. ஓம் பன்னகசயனா போற்றி
24. ஓம் கமலக்கண்ணா போற்றி
25. ஓம் ஜனார்த்தனா போற்றி

26. ஓம் கருடவாகனா போற்றி
27. ஓம் ராட்சஷ மர்த்தனா போற்றி
28. ஓம் காளிங்க நர்த்தனா போற்றி
29. ஓம் சேஷசயனா போற்றி
30. ஓம் நாராயணா போற்றி
31. ஓம் பிரம்ம பாராயணா போற்றி
32. ஓம் வாமனா போற்றி
33. ஓம் நந்த நந்தனா போற்றி
34. ஓம் மதுசூதனா போற்றி
35. ஓம் பரிபூரணா போற்றி
36. ஓம் சர்வ காரணா போற்றி
37. ஓம் வெங்கட ரமணா போற்றி
38. ஓம் சங்கட ஹரனா போற்றி
39. ஓம் ஸ்ரீதரா போற்றி
40. ஓம் துளசிதரா போற்றி
41. ஓம் தாமோதரா போற்றி
42. ஓம் பீதாம்பரா போற்றி
43. ஓம் பலபத்ரா போற்றி
44. ஓம் பரமதயா பரா போற்றி
45. ஓம் சீதா மனோகரா போற்றி
46. ஓம் மச்ச கூர்ம அவதாரா போற்றி
47. ஓம் பரமேஸ்வரா போற்றி
48. ஓம் சங்கு சக்கரா போற்றி
49. ஓம் சர்வேஸ்வரா போற்றி
50. ஓம் கருணாகரா போற்றி
51. ஓம் ராதா மனோகரா போற்றி
52. ஓம் ஸ்ரீரங்கா போற்றி
53. ஓம் ஹரிரங்கா போற்றி
54. ஓம் பாண்டுரங்கா போற்றி
55. ஓம் லோகநாயகா போற்றி
56. ஓம் பத்மநாபா போற்றி
57. ஓம் திவ்ய சொரூபா போற்றி

# தமிழ் அர்ச்சனை மலர்



ஆக்கம்

ம.ஜெகநாதன் (ஜெக்கி)